(தமிழ்ப் பேச்சு - பிரிவு ௨)

# சைவ சமயம்

சைவசமயம் எமது சமயம். அன்பே இதன் ஆதாரம். சிவபெருமானே இதன் முழுமுதற் கடவுள். அவன் எமது அம்மாவாகவும், அப்பாவாகவும் இருப்பவன். அதனாலேயே அவனாலே ஆட்கொள்ளப்பட்ட மணிவாசகப் பெருமான் "அம்மையே அப்பா ஒப்பிலா மணியே, அன்பினில் விளைந்த ஆரமுதே" என்று அந்தச் சிவனைப் பார்த்துப் பாடினார். எனவே சைவர்களாகிய நாம், எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தவேண்டும்.

சைவ சமயத்தவர்களாகிய நாம் - ஐந்து மகாபாவங்களைச் செய்யாதவர்களாக வாழவேண்டும்.

. பொய் சொல்லக்கூடாது.
. புலால் உண்ணக்கூடாது.
. உயிர்க்கொலை செய்தல் ஆகாது.
. மதுபானம் அருந்தக் கூடாது.
. மனையாளைத் தவிர மற்றைய பெண்கள் மீது ஆசை கொள்ளக்கூடாது.

இவ்வாறு வாழும் சைவர்களே உண்மைச் சைவர்கள். இவற்றைக் கடைப்பிடிக்க முயலவேண்டும். சைவராக வாழ முற்படவேண்டும். அல்லாவிட்டால், அன்பை அடிப் படையாகக் கொண்டு வாழவேண்டும்,

சைவசமயத்திலே மூன்று அடிப்படைப் பொருட்கள் உள்ளன. பதி - பசு - பாசம் என்பவையே அவை. இதில் பதி என்பது முழுமையான அறிவுடைய இறைவனைக்குறிக்கும், பசு என்பது ஆறு அறிவு உடைய உயிர்களைக் குறிக்கும், இறுதியாக பாசம் என்பது அறிவே இல்லாத உலகத்தில் கிடைக்கும் இன்பங்களைக் குறிக்கும். இவற்றில் பதியாகிய இறைவனை - சிவனை வணங்கி நம் மீது படிந்துள்ள பாசங்களை நீக்க ஒப்பற்ற வழியை நமக்கு அளித்து நிற்பதே சைவ சமயமாகும். பாசம் என்னும் போது ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் குறித்து நிற்கும். இம் மும்மலங்களையும் நீக்கிய ஆன்மாவே இறைவன் அடிகளைச் சேரவல்லது.

ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதியாக இருப்பவன் சிவபெருமான். எனவே அவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவசமயமும் தொடக்கமும் முடிவும் அற்றது அநாதியானது. புலம்பெயர்ந்த எமக்குப் புனித வாழ்வு பெறத் துணையாக நிற்பது, எம் ஒப்பற்ற சமயமாம் சைவ நெறியே.

"மேன்மைகொள் சைவநீதி! விளங்குக உலகமெல்லாம்!"

நன்றி! வணக்கம்!